# கவிமணி இன்பத்தமிழ் - XI

## மாதிரி வினாத்தாள் – 1

## மொழிப்பாடம் – பகுதி – I தமிழ்

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. $14 \times 1 = 14$

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில், மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. “வான் பொய்த்தது”– என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள் ______.
   அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
   இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது
2. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் ______.
   அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
3. “அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்” – யார், யாரிடம் கூறியது?
   அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னன் அமைச்சரிடம்
   இ) அமைச்சர் மன்னனிடம் ஈ) மன்னன் அமுதவல்லியிடம்
4. பூஜை, விஷயம், உபயோகம் – என்பவை முறையே ______ என்று தமிழில் வழங்கப்படும்.
   அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
   இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி
5. ஒரு திரவநிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறது. உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து ______.
   அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்
   ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியைத் திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை
   இ) எழுத்துமொழியைவிடப் பேச்சுமொழி எளிமையானது
   ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது
6. கூற்று : “கோடு” என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
   விளக்கம் : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
   அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி
   இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

7. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

8. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

9. பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.
அ) அன் – வந்தனன் ஆ) இன் – முறிந்தது இ) கு – காண்குவன் ஈ) அ – சென்றன

10. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு ______.
அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்
இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

11. வினைத்தொகை அல்லாத சொல்லைத் தேர்ந்தெடு.
அ) நல்லாடை ஆ) சுடுகாடு இ) கொல்புலி ஈ) குரைகடல்

12. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

13. வாடிவாசல் சிறுகதையின் ஆசிரியர் ______.
அ) புதுமைப்பித்தன் ஆ) சி. சு. செல்லப்பா இ) அ. முத்துலிங்கம் ஈ) பிரபஞ்சன்

14. Art Critic – என்பதன் கலைச்சொல் ______.
அ) இதழாளர் ஆ) கலை விமர்சகர் இ) கலைஞர் ஈ) நடிகர்

## பகுதி – II

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 2 = 6$

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
16. காவடிச்சிந்து என்பது யாது?
17. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்"– இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?
18. உணவும் உறக்கமும் அணில் கனவாம்; உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 2 = 4$

19. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறு குறிப்பு வரைக.
20. உ. வே. சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
21. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** $7 \times 2 = 14$

22. என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகே!
வழிவழி நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்,
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே!
– இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.

www.Padasalai.Net

23. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

24. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.

25. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் உறுப்பிலக்கணம் தருக.
1. சொல்வன் – சொல் + வ் + அன்
2. ஏறிய – ஏறு + இ(ன்) + ய் + அ

26. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (கம்பு, மதி, வளை)
1. அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகக் குடிக்கவும் செய்யலாம் ______.
2. அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுதான்______.

27. பாடாண் திணை – விளக்குக.

28. குரங்காட்டி, அறிவியல், ஏற்றுமதி, நீதிமான் இச்சொற்களைப் பிரித்து ஆக்கப்பெயர் விகுதிகளைக் கண்டறிக.

29. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்குரிய பொருளை எழுதுக.
அ) Dt ஆ) Trs

30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
1. அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.
2. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

## பகுதி – III

### பிரிவு – 1

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. $2 \times 4 = 8$

31. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

33. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

34. இன்குலாப், "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

### பிரிவு – 2

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. $2 \times 4 = 8$

35. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

36. தமிழ்மொழியில் "வரை" என்னும் சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

38. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

### பிரிவு – 3

குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. $3 \times 4 = 12$

39. அ) சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.

(அல்லது)

ஆ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

40. குறிஞ்சித்திணை – முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களைப் பட்டியலிடுக.

41. இலக்கியநயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)
தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம்வீற் றிருக்கும் மாதோ.

– கம்பர்

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

42. தமிழாக்கம் தருக.


அ) A picture is worth a thousand words.

ஆ) Knowledge rules the world.

இ) Just living is not enough. One must have sunshine, freedom and a little flower - Hans Anderson.

ஈ) Work while you work and play while you play.

43. கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.




## பகுதி – IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3 × 6 = 18**

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

45. அ) "இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன" – கூற்றினை மெய்ப்பிக்க.

(அல்லது)

ஆ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்தைச் சிதறாது விளக்குக.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

## பகுதி – V

**குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4 + 2 = 6**

47. அ) 'உண்டால் அம்ம' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'பகை' என முடியும் குறட்பாவை எழுதுக.

www.Padasalai.Net

# மாதிரி வினாத்தாள் – 2

## மொழிப்பாடம் – பகுதி – I தமிழ்

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

### பகுதி – I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில், மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. "கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" – அடி மோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை – காவு கொண்ட
ஆ) காலத்தால் – கனிமங்கள்
இ) கபாடபுரங்களை – காலத்தால்
ஈ) காலத்தால் – சாகாத

2. 'காவடிச் சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்
இ) முருகன் ஈ) பாரதியார்

3. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ______ நினை.
அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

4. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.
அ) விரியன் – 1. தண்டை
ஆ) திருகுமுருகு – 2. காலாழி
இ) நாங்கூழ்ப்புழு – 3. சிலம்பு
ஈ) குண்டலப்பூச்சி – 4. பாடகம்
i) 3 4 2 1 ii) 3 1 4 2 iii) 4 3 2 1 iv) 4 1 3 2

5. தமிழின் முதல் பா வடிவ நாடகநூல் ______.
அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம்
இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

6. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை ______.
அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்
i) அ – மட்டும் சரி ii) ஆ – மட்டும் சரி
iii) இரண்டும் சரி iv) அ–தவறு, ஆ–சரி

7. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ______ என்பதாகும்.
அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

8. கூற்று 1 : தஞ்சைப் பெரியகோவிலிலுள்ள ஓவியங் களை எஸ். கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.
கூற்று 2 : அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள், ஃப்ரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி

9. மாநகர் – இலக்கணக்குறிப்பு தருக.
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உரிச்சொல் தொடர் ஈ) தொழிற்பெயர்


Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

10. நிழல் போலத் தொடர்ந்தான் – இது எவ்வகை உவமை?

அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) மெய்

11. பெட்டிக்கு வந்தபின்
எல்லா காய்களும் சமம்தான்
சதுரங்கக் காய்கள் – என்ற ஜப்பானிய ஹைக்கூவின் குறியீடு

அ) மனிதர்கள் ஆ) பழங்கள் இ) தேங்காய் ஈ) பெட்டி

12. ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது

அ) உருவகம் ஆ) உவமை இ) உள்ளுறை ஈ) இறைச்சி

13. 'வானம் வசப்படும்' என்னும் புதினத்தின் ஆசிரியர்

அ) பாரதிதாசன் ஆ) கண்ணதாசன் இ) பிரபஞ்சன் ஈ) வண்ணதாசன்

14. Personality – என்பதன் கலைச்சொல் ______.

அ) ஆளுமை ஆ) அழகு இ) அறிவு ஈ) மனவெழுச்சி

## பகுதி – II

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 2 = 6$

15. 'ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின' – தொடரின் பொருள் யாது?
16. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
17. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?
18. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 2 = 4$

19. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
20. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
21. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்கு வதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** $7 \times 2 = 14$

22. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
   i) தமிழர், ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.
   ii) சான்றோர், மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.
24. பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடங்களில் அமையும்?
25. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் உறுப்பிலக்கணம் தருக.
   அ) நெருங்கின
   ஆ) போற்றி – போற்று + இ
26. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் புணர்ச்சி விதி தருக.
   1. செங்கயல்
   2. புகழெனின்

www.Padasalai.Net

27. செய்யுள் உறுப்புகள் எவை?

28. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக.

அ) தருணம்

ஆ) சரித்திரம்

29. உவமை, உருவகம் – வேறுபடுத்துக.

30. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

i) சொந்தக்காலில் நிற்றல்

ii) கானல்நீர்

## பகுதி – III

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

32. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

33. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

34. 'சேரநாடு செல்வ வளம் மிக்கது' என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.

36. KVT Complex பற்றி நீவிர் அறிவனவற்றைக் கூறுக.

37. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

38. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்து வரிகளில் எழுதுக.

### பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 4 = 12$

39. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**(அல்லது)**

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. பொருண்மொழிக்காஞ்சித் துறை என்றால் என்ன?

41. இலக்கியநயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதைமை யற்றிடும் காணீர்.

– பாரதியார்

www.Padasalai.Net

42. தமிழாக்கம் தருக.

அ) In nature, light creates the colour. In the picture, colour creates the light - Hans Hofmann.

ஆ) Look deep into nature and then you will understand everything better - Albert Einstein

இ) Simplicity is nature's first step, and the last of art - Philip James Bailey.

ஈ) Roads were made for journeys not destination - Confucius.

43. மெய்ப்புத் திருத்துநர் பணிவேண்டி, நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்க்காணும் விவரங்களுடன் தன்விவரக்குறிப்பு ஒன்று எழுதுக.

(பெயர், வயது, பாலினம், பிறந்தநாள், பெற்றோர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, அறிந்த மொழிகள், எடை, உயரம், குருதிவகை, கல்வித்தகுதி)

## பகுதி – IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3 × 6 = 18**

44. அ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' – இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

(அல்லது)

ஆ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. அ) "பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்விமுறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'கல்லும் கதை சொல்லும்' என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

(அல்லது)

ஆ) சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.

## பகுதி – V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4 + 2 = 6**

47. அ) 'உடை அணிந்தேன்' எனத் தொடங்கும் தொலைந்து போனவர்கள் பாடல்.

ஆ) 'பற்றுக' எனத் தொடங்கும் திருக்குறள்.

www.Padasalai.Net

# மாதிரி வினாத்தாள் – 3

## மொழிப்பாடம் – பகுதி – I தமிழ்

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

### பகுதி – I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில், மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?

அ) ஏதிலிக் குருவிகள் – மரபுக் கவிதை

ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை

இ) யானை டாக்டர் – குறும் புதினம்

ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை

2. சரியான விடையைத் தேர்க.

| | | | |
|---|---|---|---|
| அ) | கல்வி அழகே அழகு | 1 | தொல்காப்பியம் சிறப்புப்பாயிர உரைப்பாடல் |
| ஆ) | இளமையில் கல் | 2 | திருமந்திரம் |
| இ) | துணையாய் வருவது தூயநற் கல்வி | 3 | ஆத்திசூடி |
| ஈ) | பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் | 4 | திருக்குறள் |
| | | 5 | நாலடியார் |

i) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 1 ii) அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2

iii) அ – 5, ஆ – 3, இ – 2, ஈ – 1 iv) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 5

3. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது ______.

அ) சிற்றிதழ்; குற்றாலக்குறவஞ்சி ஆ) கவிதைநூல், திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக்கோவை

4. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.

காரணம் : சேர மன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.

அ) கூற்று சரி; காரணம் தவறு ஆ) இரண்டும் சரி

இ) இரண்டிற்கும் தொடர்பு இல்லை ஈ) கூற்று தவறு காரணம் சரி.

5. ஏமம் என்பதன் பொருள் ______.

அ) பாதுகாப்பு ஆ) செல்வான் இ) கெடு ஈ) விரைந்து

6. 'ஜனப் பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை

இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

7. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை ______.

அ) துள்ளல் ஆ) செப்பல் இ) அகவல் ஈ) தூங்கல்

8. மலைக்குன்றுகள் குறித்த ஆய்வு ______.

அ) Sociology ஆ) Epigraphy இ) Biology ஈ) Orology



Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


9. ‘இனிதென’ – இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.
   அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்; உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
   ஆ) தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்; உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.
   இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே; தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.
   ஈ) தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்; உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.
10. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது ______.
   அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
11. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள். – இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்.
   அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்
   இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்
12. உவமையின் செறிவார்ந்த வடிவமே ______ எனப்படும்.
   அ) உள்ளுறை உவமம் ஆ) இறைச்சி
   இ) உவமேயம் ஈ) உருவகம்
13. ‘சிம்பொனித் தமிழர்’ என அழைக்கப்படுபவர்
   அ) ஏ. ஆர். ரஹ்மான் ஆ) இளையராஜா
   இ) அஜொய் சக்கரபர்த்தி ஈ) சாகர்
14. கூவும் குயிலும், கரையும் காகமும் – தொடரில் இடம்பெற்ற மரபு ______.
   அ) பெயர்மரபு ஆ) வினைமரபு இ) ஒலிமரபு ஈ) இவை மூன்றும்

## பகுதி – II

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 2 = 6$

15. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
16. இங்கே ஐம்பதாண்டு வேம்பு
   கோடையில் கொட்டும் பூக்களை
   எண்ணச் சொல்கிறார்கள் – எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
17. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
18. “ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள” – இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 2 = 4$

19. ‘கோட்டை’ என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
20. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?
21. ‘தாமஸிகம்’ என்றால் என்ன?

### பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** $7 \times 2 = 14$

22. உடனிலை மெய்ம்மயக்கம் சான்று தருக.
23. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் உறுப்பிலக்கணம் தருக.
   i) வைத்தார் ii) பெற்ற
24. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் புணர்ச்சி விதி தருக.
   i) சுவரில்லாத – சுவர் + இல்லாத
   ii) பொற்சிலம்பு – பொன் + சிலம்பு
25. விகுதிகள் எவற்றை உணர்த்தும்?
26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
   i) வைகை ii) அறிவில்லாதவன்

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


27. தமிழில் பயன்படும் ஆக்கப்பெயர் விகுதிகள் யாவை?
28. தொடர் மாற்றம் செய்க.
   i) என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை. (செய்தித் தொடராக்குக)
   ii) தஞ்சைக் கோவில், எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும். (வினாத் தொடராக்குக)
29. பேச்சுவழக்கை எழுத்துவழக்காக மாற்றுக.
   அ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பயன் வராமப் போவாது.
   ஆ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.
30. தமிழாக்கம் தருக.
   1. Education is the most powerful weapon, which you can use to change the world.
   2. Culture does not make people; People make culture.

## பகுதி – III

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

31. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
33. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?
34. “நிரையம் ஒரீஇய வேட்கை” – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

35. ‘மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது’ – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
36. சமணப் பள்ளிகளும், பெண்கல்வியும் – குறிப்பு வரைக.
37. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பால் அறியப்படும் வணிகச் செய்தி குறித்து எழுதுக.
38. கோவில்கள் பெரிதாகக் கட்டப்படக் காரணம் என்ன?

### பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 4 = 12$

39. அ) பிறிது மொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

   ஆ) சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.

   வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
   துணைவலியும் தூக்கிச் செயல்.

40. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.
41. இலக்கியநயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவேதேனோ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில்வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!

– கவிமணி

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


42. கீழ்க்காணும் தலைப்பில் 10 வரிகளுக்கு மிகாமல் மரபுக்கவிதை அல்லது புதுக்கவிதை ஒன்றை எழுதுக.
மழை (அல்லது) இயற்கை

43. பின்வரும் பழமொழிகளில் ஒன்றை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
i) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.

(அல்லது)

ii) காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு

## பகுதி – IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** $3 \times 6 = 18$

44. அ) காவடிச்சிந்து ஒரு வழிநடைப் பாடல் – இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.

(அல்லது)

ஆ) நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.

45. அ) ‘சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மை’ என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

(அல்லது)

ஆ) சுந்தர ராமசாமியின் ‘காற்றில் கலந்த பேரோசை’ என்னும் தலைப்பு, ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46. அ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

(அல்லது)

ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்து எழுதுக.

## பகுதி – V

**குறிப்பு : அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** $4 + 2 = 6$

47. அ) ‘ஏடு தொடக்கி’ எனத் தொடங்கும் யுகத்தின் பாடல்.
ஆ) ‘கொளல்’ என முடியும் திருக்குறள்.

தேர்வு தொடங்கும் நாள் : 05.03.2025
தேர்வு முடியும் நாள் : 27.03.2025

| | | |
|---|---|---|
| **பள்ளிகள்** | – | **7,557** |
| மாணவர்கள் | – | 3,89,423 |
| மாணவிகள் | – | 4,28,946 |
| தனித்தேர்வர்கள் | – | 4,755 |
| சிறைவாசிகள் | – | 137 |
| **மொத்தம்** | – | **8,23,261** |
| தேர்வு மையங்கள் | – | 3,316 |
| பொதுத்தேர்வு முடிவு | – | மே, 19 |

**பொதுத்தேர்வு எழுத இருக்கின்ற மாணவ, மாணவியர் அனைவரும் உயர் மதிப்பெண்கள் பெற்று, வெற்றிவாகை சூட கவிமணி இன்பத்தமிழ் வாழ்த்துகிறது.**

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com